ஶ்ரீ

பெருமாள் தாலாட்டு என்கிற

ஸ்ரீ ராமர் தாலாட்டு.

ஸ்ரீரங்கநாயகர் திருஊஞ்சல்.

சென்னை

வித்யாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

ஸ்ரீ

ஸ்ரீ ராமர் தாலாட்டு.

பேராமயோத்திப் பெருமாளைத்தாலாட்டச்
சீரார்குருகையர்கோன் சேவடிகள்காப்பாமே. 1

அன்றமரர்க்காக அயோத்யெனும்பட்டணத்திற்
சென்றன்றவதரித்தத் திருமாலைசொன்னரோ. 2

தெள்ளுதமிழ்கொண்டாடச் சீரார்தசரதற்குப்
பிள்ளைவிடாய்தீர்த்த பெருமாளைச்சொன்னரோ. 3

காவலழியக் கருதிலங்கைத்தானழிய
மூவருடன்பிறந்து மூவுலகையாண்டாரோ. 4

சருதலர்கள்காவலனே கண்ணார்ந்தகற்பகமோ
அரியுடையதாயார்க்குப் பார்க்குடமாய்நின்றானே. 5

வீராதிவீரனே வேந்தர்சூடாமணியோ
ஸ்ரீராமனென்னுந் திருநாமம்பெற்றானே. 6

போற்பெரியவனே பேருலகையாண்டவனே
சீரார்சிறப்புடைய செங்கண்முகின்மேனியனே. 7

குவலயத்தோர்கொண்டாடக் குடுமிப்பிராயத்தே
தவமுனிவன்சொற்கேட்டு தாடகையையெய்தவனே

மாசிலாமுத்தோ மணிவயிரத்தோளானே
கோசிகனார்வேள்விக் குறைதவிர்த்தகாவலனே. 9

அரியகுடிக்கரசேர் வாடவர்குப்போரேரோ
பெரியதொருசிலையைப் பெண்வடிவுசெய்தவனே. 10

அலைகடல்சூழ்வையகத்தே ஆருமசைக்கவொண்ணாச்
சிலையைவளையக்குணித்துச்சீதைமணஞ்செய்தவனோ.

தாய்கைகேசிசொற்படிக்குத் தாமமுடிசூடாமல்
சீதையுடன்கானகத்தே சென்றபெருமாளோ. 12

தாமமணிமார்பனோ தம்பிதுணையுள்ளவனோ
மாமுனிவர்க்கெல்லா மனக்கவலைதீர்த்தவனோ. 13

தாக்குடனேபேசுந் தனக்கடங்காசூர்ப்பநகை
மூக்கறிந்தசேவகர்க்கு முன்புவந்தசேவகனே. 14

தன்மாயைக்காட்டித் தையலுளமாலாக்கும்
பொன்மானின்பின்போன புண்ணியனைசொன்னோறோ.

அககானகத்தே யணிமயிலைத்தேடுதற்குச்
சுக்ரீவன்றன்னுடனே தோழமையைக்கொண்டானோ

கோலமதக்களிரோ கொற்றவர்தம்பேரேறோ
வாலிதனைக்கொல்லவொரு வாளிசெய்தசேவகனோ.17

ஆழிகொடுத்தே யனுமானைத்தூதனுப்பி
வாழுமிலங்கைநகர் வழிபார்த்துநின்றவனோ. 18

இருள்கடலைத்தாண்டி யிலங்கைநகர் தீமூட்டித்
திரும்பியனுமானுரைக்கச் சீதைசெயல்கேட்டவனோ.

வானரங்களென்னு மகாசேனைதன்னுடனே
தானிலங்கைவேரறுக்கத் தண்டெடுத்தசேவகனோ.20

அடல்பெரியவீரியனே வன்புகுடிகொண்டவனே
கடல்கலங்கமுன்னாள் கணைதொடுத்தசேவகனே. 21

துலங்கும்பெருங்கடலைத் தூர்த்தேறியப்புரம்போய்
இலங்கைநகர்கண்ட விராகவனைச்சொன்னாரோ. 22

கொக்கரித்துவானரங்கள் கூத்தாடவெத்திசையும்
அக்கடலைப்பின்னிட்டரக்கர்பதிபுக்கவனே. 23

குன்றுபோலவந்த கொடியதொருராவணனை
இன்றுபோய்நாளைவா வென்றபெருமாளோ. 24

நாடியரக்கர்பதி நாலாயிரவெள்ளத்துடன்
கூடிவரும்ராவணனைக் கொன்றபெருமாளோ. 25

பத்துமணியும் பத்திரண்டுதிண்டோளும்
தத்திவிழவெய்த தடம்பெரியசேவகனே. 26

எட்டிலங்கையைச்சுட் டிலக்குமியைத்தான்மீட்டுச்
சட்டமுடையயோத்திநகர் சார்ந்தரகுராமனே. 27

பூண்டமணித்தேரும் பொன்னிலங்கைமாநகரும்
மீண்டுமவன்றம்பி விபீஷணருக்கீந்தவனே. 28

ஸ்ரீராமராமனே சீதைசிறைமீட்டவனே
போர்ப்பெரியவனே பேருலகையாண்டவனே. 29

செப்பமுடன்சேர்த்தெடுத்த ஸ்ரீராமன்தாலாட்டை
முப்பதுங்கற்றவர்கள் மூவுலகையாள்வாரோ. 30

ஸ்ரீராமர்தாலாட்டு-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீரங்கநாயகர்

திருஊசல்.

தார்சிறந்தமுத்ததினாற் கால்கணாட்டி
தனிப்பவளக்கொம்பதினர் கொடுங்கைமாட்டி
வார்சிறந்தவைரத்தாற் பலகைபூட்டி
வண்ணநவமணிமாலை வயங்கசூட்டி
ஏர்சிறந்தசித்திரங்க ளெங்குந்தீட்டி
இலகுதிருப்பொன்னீசர் சேர்வைகாட்டி
சீர்சிறந்தமாதவனா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனா ராடிரூசல். 1

வச்சிரமணிதங்கத்தாற் கால்கள்பூட்டி
வைரங்கோமேதகத்தாற் பலகைநாட்டி
பச்சைமணிமரகதத்தாற் கொடுங்கைநாட்டி
பசும்பொன்னின்சங்கிலியால் வடங்கள்பூட்டி
உச்சிதமாய்வானவர்கள் சமைத்தஊசல்
உலகளந்தமாயவனா ருண்மையாக
செச்சையணிமாயவனா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனா ராடிரூசல். 2

மாமறையைநவமணியாய்க் கால்களாக்கி
வழுத்துமநுசாத்திரத்தைப் பலகையாக்கி
தூமருவும்புராணமதைக் கொடுங்கையாக்கி
சொல்லரியபலகலையைச் சங்கிலிகளாக்கி

பூமகளுநிலமகளும் பொற்பாயோங்க
பொன்னுலரகார்செய்தளித்த பொன்னினூசல்
தேமருவும்வண்டுளப மாலைபூண்ட
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். 3

அணிஅணிபாய்த்தேவர்கள்வந் தடிகொண்டாட
அந்தரர்கின்னரராகருட ரணிந்துபாட
கணிகையர்கள் கொலுமுகத்திற் களித்தேயாட
கனனியர்களிருமருங்குங் கவரிபோட
பணிவுடனேமுனிவரெல்லாம் பரிந்துதேட
பன்னிருவராழ்வார்கள் பதத்தினூட
திணிவுபெருந்திருமார்பா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். 4

மாமறையோர்மாமுனியோர் வருந்திப்போற்ற
வானவர்கள்பூமாரி மகிழ்ந்துதூற்ற
சேமமுடனேம்முரகஞ் சிறக்கச்சாற்ற
தெரிவையர்கள்திருவாலஞ் சிறந்துமாற்றப்
பூமகளும்பார்மகளு மருங்கில்வாழ்க
பொன்னடியிலாழ்வார்கள் பொலிந்துதாழ்க
தேமருவுங்காவேரி சிறந்துசூழ
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். 5

பொன்னணிந்தநவமணிமா மாலையாட
புகழ்பெரியவண்டுளப மாலைபாட

வன்னமுள்ளச்சந்திரவட்டக் குடைகளாட
மகரமணிக்கண்டிகையா மாலையாட
மன்னுமணிமுடியாடப் பதக்கமாட
வாகுவலயங்களுமே யோங்கியாட
செந்நெல்விளைவயல்சூழ்ந்து செறிந்தேயோங்கும்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். 6

இந்திரரும்வானவ்ரும்வடந்தொட்டாட்ட
இறையவரும்மறையவரும் வடந்தொட்டாட்ட
சந்திரரும்சூரியரும் வடந்தொட்டாட்ட
தானவரும்வானவரும் வடந்தொட்டாட்ட
கொந்தலருங்குழன்மடவார் வடந்தொட்டாட்ட
கோகனகப்பொற்பாதங் குலுங்கியாடச்
சிந்தைமகிழ்ந்திருவரங்க ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். 7

சதுர்மறையைத்திருடியவன் றன்னைவென்றேன்
தனியிலங்கைராவணனர் தலையுங்கொன்றேன்
அதிசயமாய்ப்பாண்டவரைக் காத்தமூர்த்தி
ஆலிலைமேற்பள்ளிகொண்ட வாதிமூர்த்தி
கதிரொளியாய்ப்புவியளந்த கருணையாளன்
கன்னியர்கள் துகிலுரிந்த கள்ளமாயன்
சதுரிலகும்ஸ்ரீரங்க ராடிரூசல்
ஜானகிமணாளனே ராடிரூசல். 8

சங்கரனுமைங்கரனும் மகிழ்ந்துவாழ்த்த
சதுர்முகனுமறுமுகனுந் தாழ்ந்துபோற்ற

துங்கமுள்ளநவசித்தர் துதித்துப்போற்ற
சொல்லும்பதினெண்கணமுந் தொழுதுபோற்ற
எங்குமுள்ளவண்டத்தோ ரேத்திப்போற்ற
ஈராறுமாழ்வார்களி னங்கிபோற்ற
செங்கமலையாளுடனே யாடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். 9

மலர்மேவுதிருமகளோர் பக்கமேவ
வாட்டங்கனிலமகளோர் மக்கமேவ
நலமேவுபன்னிரண்டாழ்வார்கள்போற்ற
நாதமுனிமுதலானோர் வணங்கியேத்த
வலமேவுமைம்படைகள் கையிலோங்க
மருமார்பிற்கவஸ்துவா பரணமாடச்
சிலைமேவுமலர்க்கந்தா ராடிரூசல்
ஸ்ரீரங்கநர்யகனு ராடிரூசல். 10

இடையினிற்பீதாம்பரந்தா னிருந்துமின்ன
எழிற்கரத்திற்பஞ்சவா யுதங்கள்மின்ன
வடிவுபெருந்திருமேனி வண்ணமின்ன
மதிவதனங்கிருபையொடு மகிழ்ந்துமின்ன
முடிதனிலேமுடிமாலை முயங்கிமின்ன
மொழிமார்பிற்க்கவுஸ்துவா பரணந்துன்ன
திடமேவுங்காவேரி சிறந்துசூழும்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். 11

ஸ்ரீரங்கநாயகர் திருஊசல்

முற்றிற்று.